# வெறுப்புப் பேச்சு

## நோய்ப்பரவுகை காலத்தின்போது இலங்கையில் வெறுப்புப் பேச்சு



Co-funded by the European Union

#MINORMATTERS

Norad

நோய்ப்பரவுகை காலத்தின்போது இலங்கையில் வெறுப்புப் பேச்சு

கொழும்பு, 2020

பதிப்புரிமை © MinorMatters

Minority Rights Group இன் ஒத்துழைப்புடன் வெளியிடப்பட்டது

MinorMatters ஆனது இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் முன்னெடுப்பொன்றாகும்.

இவ்வெளியீடானது, மத சுதந்தித்துடன் தொடர்புடைய செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுவதற்காக வேறு ஏதேனும் ஒழுங்கமைப்புக்களினால் மீள்பிரதி செய்யப்படலாம். எவ்வாறெனினும், அது இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் எழுத்துமூலமான சம்மதத்துடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், மூலம் ஏற்றங்கீகரிக்கப்படுதலும் வேண்டும். இவ் வெளியீட்டின் எந்தவொரு பகுதியும், இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் அதிகாரமளித்தலின்றி, எந்த வடிவிலும் அல்லது எந்த வழிமுறையினூடாகவும் மெருகூட்டப்படுதலோ, பகிரப்படுதலோ அல்லது மீளப்பெறக்கூடிய தரவுத்தள முறைமையொன்றில் களஞ்சியப்படுத்தப்படுதலோ கூடாது. வர்த்தக பாவனை மற்றும் மீள்பிரதி என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

## உள்ளடக்கம


எற்றங்கிகரிப்பக்கள் ........ 4

பின்னணி ........ 6

வெறுப்பக் கற்றங்கள் மற்றம் தண்டனையிலிரந்த விடபடகின்ற கலாசாரம் ........ 8

மறைமையியல் ........ 16

வெறுப்பப் பெச்ச என்றால் என்ன? ........ 17

கண்டறியப்பட்டவைகள் ........ 22

சிங்கள மொழியிலான பதிவகள் ........ 23

அடக்க சடங்ககள் தொடர்பான சர்ச்சைகள் ........ 25

தமிழ் மொழியிலான பதிவகள் ........ 26

சவிஸ் பொதகர் தொடர்பான சம்பவம் ........ 28

மடிவகள் ........ 30

விதந்தரைகள் ........ 34

அரச நிறவனங்களக்க ........ 34

சமூக உடகத் தளங்களக்க ........ 35

ஜனரங்சக உடகங்களக்க ........ 36

சிவில் சமதாயங்களக்க ........ 37

## எற்றங்கிகரிப்பக்கள்

இவ் அறிக்கையானது இலங்கை-இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளரான கலாநிதி. மரியோ கோமஸ் அவர்களினால் எழுதப்பட்டுள்ளது. தரவுகள் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தைச் சேர்ந்த சஞ்சுலா பியடர்ஸ் மற்றும் ஹேஷ்டேக் (Hashtag) தலைமுறையைச் சேர்ந்த பிரியதர்ஷினி விஜயரத்னம் ஆகியோரால் சேர்க்கப்பட்டது. இவ் அறிக்கைக்கான மீளாய்வு மற்றும் உதவிகள், யாமினி ரவீந்திரன் (பணிப்பாளர், சட்டம் மற்றும் ஆதரித்து வாதாடுதல், இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம்), ஷலோமி டேனியல், அனுஷ்கா விஜேசிங்க மற்றும் ஜேஷான் ஜெகசோதி ஆகியோரை உள்ளடக்கிய இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் பணியாளர் குழாமினரால் செய்யப்பட்டன.

முன்னர் இலங்கை சுவிஷேக ஊதியம் என அறியப்பட்ட இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவமானது 1952 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் மத சுதந்திரம் மற்றும் சமூக நீதி ஆணைக்குழுவானது, ஆதரித்து வாதாடுதல், ஆய்வு, ஆவணப்படுத்தல், பயிற்சி மற்றும் கல்வியினூடாக அனைத்து இலங்கையர்களினதும் மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரத்தினை மேம்படுத்தும்பொருட்டு, இலங்கையின் மத சமுதாயங்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் பிரிவினைகளை கண்காணிக்கின்றது மற்றும் ஆவணப்படுத்துகின்றது.

ஆமைெசஆயவவநசள ஆனது இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் மத சுதந்திரம் மற்றும் சமூக நீதி ஆணைக்குழுவின் முன்னெடுப்பொன்றாகும் என்பதுடன், அது இலங்கையில் மத ஒற்றுமையினை வளர்ப்பதற்காக மற்றும் மத சுதந்திரம் மற்றும் நம்பிக்கையினைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பகிரங்க இயக்கமொன்றாகும்.

இவ்வெளியீடானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான நோர்வேஜிய செயலாண்மையின் ஆதரவுடன் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வெளியீட்டின் உள்ளடக்கங்களுக்கான தனிப் பொறுப்புடைமை இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தினையே சாரும் என்பதுடன், அவை எந்தவொரு வழியிலும் ஐரோப்பிய ஒன்றியம் அல்லது அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான நோர்வேஜிய செயலாண்மையின் கருத்துக்களை பிரதிபலிப்பதாகக் கருதப்பட முடியாது.

இவ் அறிக்கையின் பகிர்ந்தளிப்பு உரிமைகளை இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவம் தக்க வைத்துள்ளது. இவ் அறிக்கையானது, ஏதேனும் ஒழுங்கமைப்பினால் மனித உரிமைகள் பற்றிய கல்வி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுவதற்காக மீள்பிரதி செய்யப்படலாம், எவ்வாறெனினும், அத்தகைய சந்தர்ப்பத்தில் மூலம் ஏற்றங்கீகரிக்கப்பட

வேண்டும் என்பதுடன் அத்தகைய பாவனை தொடர்பாக இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

உங்களுடைய கருத்துக்களை மின்னஞ்சல் செய்யுங்கள்: rlc@nceasl.org

## பின்னணி

வெறுப்புப் பேச்சானது பல சமூகங்களில் வழக்கமான அம்சமொன்றாகியுள்ளதுடன் சமூக ஊடகங்கள், ஜனரஞ்சக ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் மற்றும் ஏனைய தளங்களில் இடம்பெற்று வருகின்றது. இலங்கையில், அது இன மற்றும் மத சிறுபான்மைக் குழுக்கள், பெண்கள், மனித உரிமைகள் மற்றும் சமாதானத்திற்கான செயற்பாட்டாளர்கள், அகனன்கள் மற்றும் திருனர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் தொடர்பில் செய்யப்படுகின்றது. புதிய திறன் பேசி ஒருங்குகள் (Applications) போன்ற புதிய தொழில்நுட்பங்கள், புதிய ஒருங்குகள் மற்றும் புதிய சாதனங்கள் என்பன அண்மைக்காலங்களில் சமூக ஊடகங்களில் பதிவுகள் மற்றும் கருத்துக்கள் மிகையான அளவில் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளன. இப்புதிய ஒருங்குகள் வெறுப்புப் பேச்சுக்களை உள்ளடக்கியுள்ள பதிவுகள் பரிமாற்றப்படும் நேரம் மற்றும் அவற்றின் அடைவினை மிகையாக அதிகரித்துள்ளன.[1]

கடந்த தசாப்தத்தில் இணைய ஊடுருவல் வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஒத்திசைவாக கையடக்கத் தொலைபேசியியலும் அதிவேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. 2019 இன் முடிவில், இலங்கையிலுள்ள கையடக்கத் தெலைபேசி இணைப்புக்கள் 32.9 மில்லியனாக அதிகரித்துள்ளது, இவ் எண்ணிக்கை அதற்கு முந்தைய வருடத்தில் 32.5 மில்லியனாக இருந்தது. ஒவ்வொரு 100 நபர்களினதும் இணைப்புக்களின் எண்ணிக்கையினால் அளவிடப்பட்டதன்படி, 2019 இன் முடிவில் கையடக்கத் தொலைபேசி ஊடுருவல் 150.8 ஆகக் காணப்படும். வேறு சொற்களில் கூறுவதாயின், சனத்தொகையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அண்ணளவாக 1.5 செறிவட்டைகள் (Sim cards) காணப்பட்டன. 2018 இல், கையடக்கத் தொலைபேசி இணைப்புக்கள் 15% அளவில் அதிகரித்திருந்தது.[2]

கடந்த காலங்களில் இணையத் தொடர்பும் அதிகரித்துள்ளது என்பதுடன் 2019 இல் 26.9 சதவீதமாக விரிவடைந்துள்ளது. 2019 இன் முடிவில், இணைய ஊடுருவல் 61.5 ஆக

[1] பார்க்க: Shilpa Samaratunga and Sanjana Hattotuwa, *Liking Violence: A study of hate speech on Facebook in Sri Lanka*, (Centre for Policy Alternatives, 2014) and Sanjana Hattotuwa, (2019) Between Scylla and Charybdis: Social Media in Sri Lanka's Constitutional Referendum, The Round Table, 108:6, 695-707, (The Commonwealth Journal of International Affairs) https://doi.org/10.1080/00358533.2019.1688464.

[2] இலங்கை மத்திய வங்கி, வருடாந்த அறிக்கை *2019*, p 119 - 120, available at https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2019/en/7_Chapter_03.pdf.

*இருந்தது.*[3] *ஒரு வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கு அமைய, 2020 ஒக்டோபர் மாதமளவில், 7,302,000 இலங்கையர்கள், அதாவது மொத்த சனத்தொகையினரில் 34.4% ஆனோர் முகப்புத்தகத்தில் இருக்கின்றனர்.* [4] *அதே வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதற்கமைய, 64.7% ஆன பாவனையாளர்கள் ஆண்களாகவும் 35.3% ஆனோர் பெண்களாகவும் இருந்துள்ளனர். 24-35 இற்கிடைப்பட்ட வயதுகளை உடைய பாவனையாளர்கள் 2,530,000 ஆக, அதாவது பாவனையாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 34.6% ஆக உள்ளனர். 55 வயதிற்கு மேற்பட்ட பாவனையாளர்கள் 5.3% இனர் மாத்திரமே ஆகும்.*

---

[3] *இலங்கை மத்திய வங்கி*, *வருடாந்த அறிக்கை*, p 119, available at https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/annual_report/2019/en/7_Chapter_03.pdf.

[4] https://napoleoncat.com/stats/facebook-users-in-sri_lanka/2020/10.

## வெறுப்பக் கற்றங்கள் மற்றம் தண்டனையிலிரந்த விடபடகின்ற கலாசாரம்

கடந்த பத்து வருடங்களாக இன-மத முறுகல்கள் குறிப்பிடத்தக்களவு விஸ்தீரனமடைந்துள்ளமையினை இலங்கைக் கண்டுள்ளது. மத அடிப்படையில் தூண்டப்பட்ட வன்முறை மற்றும் மத சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்கள் உள்ளடங்கலாக வெறுப்புக் குற்றச் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், பெரும்பாலான இவ்வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கு இலக்காககப்படுகின்றவர்களாக முஸ்லிம்கள் மற்றும் சுவிசேஷக கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். இலங்கைக்கு மத வன்முறைகள் புதிய விடயமொன்றாக இல்லாதிருக்கின்ற அதேவேளை, அண்மைக்காலங்களில் இடம்பெறுகின்ற வன்முறைகளின் அடிக்கடி நிகழ்கின்ற தன்மை மற்றும் தீவிரத்தன்மை என்பன புதிய தோற்றப்பாடொன்றாக உள்ளது.[5] வெறுப்புக் குற்றங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பன தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரச் சூழலில் மற்றும் தனது நீதிபேராணையை நடைமுறைப்படுத்துவதற்கான மற்றும் குற்றவாளிகள்மீது வழக்குத் தொடர்வதற்கான அரசின் விருப்பமின்மை காணப்படுகின்ற ஒரு சூழலில் வளர்ச்சியடைந்துள்ளன. அதேநேரத்தில், அரசியல் உயர்குடிகள் அரசியல் அதிகாரத்தினை நாடுவதற்காக மற்றும் அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மத அடையாளங்கள் தொடர்பான அணிதிரட்டல்களைச் செய்வதற்கு தயங்கவில்லை.

முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள், 2014 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அளுத்கம மற்றும் அதற்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களில், 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜிந்தோட்டையில், 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அம்பாறையில் மற்றும் அதனைச்சுற்றி, 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் திகன மற்றும் தெல்தெனிய பிரதேசங்களில் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தொடர்ந்து, 2019 ஆம் ஆண்டு மே மாதம் கம்பஹா, குருணாகலை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் இடம்பெற்றிருந்தன. பள்ளிவாசல்கள் மற்றும் தனியார் ஆதனங்களுக்கப்பால், முஸ்லிம் வியாபாரங்கள் மற்றும் பொருளாதார வளமைக்கான சின்னங்களும் இலக்கு வைக்கப்பட்டிருந்தன.

---

[5] *பார்க்க:* G.P.V Somaratna, *Kotahena Riot 1883: A Religious Riot in Sri Lanka*, (Deepanee Printers, 1991) for an account of the 1883 anti-Christian riots; Kumari Jayawardene, , 'Economic and Political Factors in the 1915 Riots' (1970) 29(2) *The Journal of Asian Studies* 223 and Shamara Wettimuny, '*Regulating Religious Rites: Did British Regulation of "Noise Worship" Trigger the 1915 Riots in Ceylon?*' (London School of Economic and Political Science, 31 March 2018) at www.blogs.lse.ac.uk/lseih/2018/03/31/regulating-religious-rites-did-british-regulation-of-noise-worship-trigger-the-1915-riots-in-ceylon/ for an account of the anti-Muslim riots of 1915.

சுவிஷேக கிறிஸ்தவர்களும் கடந்த ஆண்டுகளில் இலக்கு வைக்கப்பட்டிருந்தனர். இது உடல்ரீதியானத் தாக்குதல்கள், வழிபாட்டிடங்கள் மீதானத் தாக்குதல்கள், மத சேவைகளுக்கு இடையூறு செய்தல் மற்றும் அடக்க சடங்குகள் உள்ளடங்கலான மத சடங்குகளுக்கு தடை போடுதல் போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. சில சந்தர்ப்பங்களில், சட்ட அமுலாக்க அதிகாரிகள் சம்பவ இடங்களில் இருந்தபோதும், தலையீடு செய்திருக்கவில்லை. வேறு சில சந்தர்ப்பங்களில், அவர்கள் வன்முறைகளை புரிவதில் ஈடுபட்டிருந்தனர். வன்முறையில் ஈடுபடுவதற்கு ஏனையோரைத் தூண்டியமை உள்ளடங்கலாக, பௌத்த குருமார் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதனை எடுத்துக்காட்டுவதற்கான தனிப்பட்டரீதியில் சேகரிக்கப்பட்ட நிகழ்வு சான்றுகள் உள்ளன.[6]

2015 இல் அரசியல் நிலைமாற்றமொன்று ஏற்பட்டதுடன், அக்காலப்பகுதியில் மிகவும் சகிப்புத்தன்மை கூடிய அரசியல் கலாசாரமொன்று தோற்றம்பெற்றபோதிலும் கூட, இன-மதங்களுக்கிடையிலான உறவுகள் பிரச்சினைக்குரியதாகவே காணப்பட்டன. இது இன-மதக் குழுக்களுக்கிடையிலான அதிகரிக்கின்ற பிளவுபடுத்தல்களை கட்டியம்கூறுவதோடு, இப்பிளவுபடுத்தலானது, பிரிவுகளை மேலும் ஆழமானதாக்கும்பொருட்டு மற்றும் முறுகல்களை விரிவுப்படுத்தும்பொருட்டு, மிதவாத செயற்பாட்டாளர்களினாலும் அரசினாலும் தூண்டிவிடப்படுகின்றது மற்றும் இயக்கப்படுகின்றது.

---

[6] இலங்கையில் மதங்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் வன்முறைகள் தொடர்பான அண்மைய ஆக்கங்களுக்காக, பார்க்க: Gehan Gunatilleke, *The Chronic and the Acute: Post-War Religious Violence in Sri Lanka* (International Centre for Ethnic Studies and Equitas, 2015); Gehan Gunatilleke, *The Chronic and the Entrenched: Ethno-Religious Violence in Sri Lanka* (International Centre for Ethnic Studies and Equitas, 2018); Benjamin Schonthal, 'Environments of Law: Islam, Buddhism, and the State in Contemporary Sri Lanka' (2016) 75(1) *The Journal of Asian Studies* 137; Benjamin Schonthal, 'Litigating Vinaya: Buddhist Law and Public Law in Contemporary Sri Lanka' (2018) 3 *Buddhism Law & Society* 1; Mohamed Faslan and Nadine Vanniasinkam, *Fracturing Community: Intra-Group Relations among the Muslims of Sri Lanka* (International Centre for Ethnic Studies, 2015); Farah Mihlar, *Coming out of the Margins: Justice and Reconciliation for Conflict-Affected Muslims in Sri Lanka* (International Centre for Ethnic Studies, 2018); Farzana Haniffa and Vijay Nagaraj, *Towards Recovering Histories of Anti-Muslim Violence in the Context of Sinhala-Muslim Tensions in Sri Lanka* (International Centre for Ethnic Studies, 2016); Ameer Ali, 'Four Waves of Muslim-Phobia in Sri Lanka: c.1880–2009' (2015) 35(4) *Journal of Muslim Minority Affairs* 486; *The Quest for Redemption: The Story of the Northern Muslims – Final Report of the Citizens' Commission on the Expulsion of Muslims from the Northern Province by the LTTE in October 1990*, 2nd edn (Law & Society Trust, 2011); Dhammika Herath and Harshana Rambukwella, *Self, Religion, Identity and Politics: Buddhist and Muslim Encounters in Contemporary Sri Lanka* (International Centre for Ethnic Studies, 2015); Neil Devotta, 'Religious Intolerance in Post-Civil War Sri Lanka' (2018) 49(2) *Asian Affairs* 278; National Christian Evangelical Alliance of Sri Lanka, *The Role of Religion in Transitional Justice in Sri Lanka: A Faith Exploration – Right to Truth, Justice and Human Dignity* (National Christian Evangelical Alliance of Sri Lanka, 2018); UN OHCHR, 'Report of the UN Special Rapporteur on Freedom of Religion or Belief, Dr Ahmed Shaheed, to the Human Rights Council, following a country visit to Sri Lanka in August 2019' (28 February 2020) UN Doc A/HRC/43/48/Add.2, at www.ohchr.org/EN/Issues/FreedomReligion/Pages/Visits.aspx; National Christian Evangelical Alliance of Sri Lanka, *Religious Freedom Violations in Sri Lanka: The Use Of Right to Information Law To Assess The Response Of Law Enforcement Authorities And The Judiciary, Phase 1,* (National Christian Evangelical Alliance of Sri Lanka, 2020); Ranmini Vithanagama, *Tracking Coexistence: Understanding Perceptions of the Religious 'Other'*, (International Centre for Ethnic Studies, 2020) and Mario Gomez, *Prosecuting Religious Violence in Sri Lanka*. In Thio Li-ann and Jaclyn L Neo (eds), '*Religious Offences in Common Law Asia: Colonial Legacies, Constitutional Rights and Contemporary Practice*', (Hart: 2020).

தண்டனையிலிருந்து விடுபடுகின்ற இக்கலாசார சூழமைவில், சமூக ஊடகங்களில், வெறுப்புப் பேச்சானது தீவிரமடைந்துள்ளது மற்றும் வளர்ந்துள்ளது. இலங்கை சட்டம் வெறுப்புப் பேச்சினைக் குற்றமொன்றாக்கின்றபோதிலும், இதுவரையில் ஆவணப்படுத்தப்பட்ட வழக்குத்தொடர்வுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. [7] உதாரணமாக, அரசியல் மற்றும் குடியியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்கு சட்டம் பின்வருமாறு கூறுகின்றது:

> ஆளொருவர் போரைப் பரப்புதலோ அல்லது பாரபட்சத்தை, எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வன்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன அல்லது மதரீதியான பகைமையை ஆதரித்தலோ ஆகாது....
>
> ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் தவறொன்றை:-
>
> (அ) புரிவதற்கு எத்தனிக்கும்
>
> (ஆ) அதனைப் புரிவதில் உதவி புரியும் அல்லது உடந்தையாயிருக்கும் அல்லது
>
> (இ) புரியப்போவதாக அச்சுறுத்துகின்ற

---

[7] மத குற்றங்கள் தொடர்பில் நான்கு சட்ட நடப்பாட்சிகள் உள்ளன: அரசியல் மற்றும் குடியியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்கு சட்டம் 2007 தண்டனைக் கோவை, விசேடமாக பிரிவு 291அ, 291ஆ மற்றும் 120 இனைப் பார்க்க் 1865 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், பிரிவு 2(1)(ஏ) இனைப் பார்க்க. 2007 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க கணிணி குற்றங்கள் சட்டத்தினையும் பார்க்க. அரசியலமைப்பின் உறுப்புரை 10 ஆனது சிந்தனை செய்வதற்கான மற்றும் மனசாட்சி மற்றும் நம்பிக்கைகளைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தினை மற்றும் மதமொன்றினை அல்லது நம்பிக்கையொன்றினைக் கொண்டிருப்பதற்கான அல்லது ஏற்றுக்கொள்வதற்கான சுதந்திரத்தினை உத்தரவாதப்படுத்துகின்றது. அது வேரூன்றச் செய்யப்பட்டுள்ள ஒரு ஏற்பாடாகும் என்பதுடன் மட்டுப்படுத்த முடியாததுமாகும். இது, தனியாகவோ அல்லது மற்றவருடன் சேர்ந்தோ, பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும், தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ, வழிபட்டிலும், அனுசரனையிலும், நடைமுறையிலும் மற்றும் போதனையிலும் வெளிப்படுத்துவதற்கான உரிமையினைப் பாதுகாக்கின்ற உறுப்புரை 14(1)(உ) இனால் ஆதரவளிக்கப்படுகின்றது. உறுப்புரை 10 இனைப் போன்றல்லாது, உறுப்புரை 14(1)(ஈ) இல் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகள் தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தின் பாதுகாப்பு என்ற காரணிகளின் அடிப்படையில் அல்லது ஏனையோரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கான தகுந்த அங்கீகாரம் மற்றும் மதிப்பினை பாதுகாக்கின்ற நோக்கத்திற்காக அல்லது ஜனநாயக சமூகமொன்றின் பொதுவான நலனின் நியாயமானத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு மட்டுப்படுத்தப்படலாம். உறுப்புரை 14(1)(அ) ஆனது வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தின் உரிமையினைப் பாதுகாக்கின்றது.

ஒவ்வோராளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.[8]

நபரொருவரின் அல்லது குழுவொன்றின் மத உணர்வுகளை காயப்படுத்தல் அல்லது அவமதித்தலை தண்டனைக்கோவை குற்றமொன்றாக்குகின்றது.[9] மேலும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது பின்வருமாறு கூறுகின்றது:

> ஒன்றில் சொல்லப்பட்ட அல்லது வாசிப்பதற்கென உத்தேசிக்கப்பட்ட சொற்களினால் அல்லது கட்புலனாகக்கூடிய குறிப்பீடுகளினால் அல்லது வேறு வகையில், வன்முறைச் செயல்களை அல்லது மத, இன அல்லது சமுதாய ஒற்றுமைக்கேடு அல்லது பகைமை உணர்வுகளை அல்லது வேறுபட்ட சமுதாயங்களுக்கிடையே அல்லது இன அல்லது மதக்குழுக்களுக்கிடையிலான விரோதச் செயல்களை புரிகின்ற அல்லது புரிவதற்கு எண்ணுகின்ற எவரேனுமொரு நபர்…. குற்றமொன்றினைப் புரிந்தவராதல் வேண்டும்.[10]

இவ் ஏற்பாடுகள் காணப்பட்டபோதிலும், வெறுப்புப் பேச்சினைப் பரப்புபவர்கள் தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரத்துடன் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். [11] பதிலாக, மத மற்றும் இன சிறுபான்மையினரின் அங்கத்தவர்களை இலக்குவைக்கும் பொருட்டு, இவ் ஏற்பாடுகள் தேர்ந்தெடுத்து,

---

[8] *அரசியல் மற்றும் குடியியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்கு சட்டம் 2007, பிரிவு 3(1) மற்றும் (2)*

[9] *தண்டனைக் கோவையின் பிரிவு 291அ இனைப் பார்க்க: எவரேனுமொரு நபர், வேறு எவரேனுமொரு நபரின் மத உணர்வுகளைக் காயப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன், அந்நபர் கேட்கக்கூடிய விதத்தில் ஏதேனுமொரு சொல்லினை சொல்லுதல் அல்லது சத்தத்தினை எழுப்புதல் அல்லது அந்நபரின் பார்வைபடுகின்ற இடத்தில் ஏதேனும் செய்கைகளை செய்தல் அல்லது ஏதேனும் பொருளொன்றினை வைத்தல், ஒரு வருடத்திற்கு நீட்டிக்கப்படக்கூடிய சிறை தண்டனையினால் அல்லது தண்டப்பணத்தினால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றாகும். மற்றும் தண்டனைக் கோவையின் பிரிவு 291ஆ: எவரேனுமொரு நபர், ஏதேனுமொரு வகுப்பினைச் சேர்ந்த நபர்களுடைய மத உணர்வுகளை அவமதிக்க வேண்டுமென்ற மற்றும் தீங்கான எண்ணத்துடன், ஒன்றில் சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்களினால் அல்லது கட்புலனாகின்ற குறிப்பீடுகளினால், அவ்வகுப்பின் மதத்தினை அல்லது மத நம்பிக்கைகளை அவமதித்தல் அல்லது அவமதிக்க முயற்சித்தல், இரண்டு வருடங்களுக்கு நீட்டிக்கப்படக்கூடிய சிறை தண்டனையினால் அல்லது தண்டப்பணத்தினால் அல்லது இரண்டினாலும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமொன்றாகும். தண்டனைக் கோவையின் பிரிவு 120 இனையும் பார்க்க.*

[10] *1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2(1)(ஏ)*

[11] See also Centre for Policy Alternatives, '*Confronting Accountability for Hate Speech in Sri Lanka: A Critique of the Legal Framework*' (2018).

பயன்படுத்தப்பட்டுள்ளன.[12] அண்மைக்காலங்களில் இடம்பெற்ற, மதங்களுக்கிடையிலான உறவுநிலையுடன் தொடர்புடைய ஒரேயொரு குறிப்பிடத்தக்க வழக்குத்தொடர்வு, இறுக்கத்தன்மை மிக்க 'பொது பல சேனா' அல்லது 'பௌத்த அதிகாரப் படையினை' வழிநடத்துகின்ற வணக்கத்திற்குரிய கலகொட அத்தே ஞானசார தேரரின் குற்றத்தீர்ப்பாகும். எவ்வாறெனினும், அவர், ஊடகவியலாளரொருவர் காணாமற்போன விடயம் தொடர்பான விசாரணைக்கு இடையூறு விளைவித்தமைக்காக மற்றும் அதற்கு தலைமை ஏற்றிருந்த நீதவான் மீது முறைகேடான வார்த்தைகளை பிரயோகித்தமைக்காக, அரசியலமைப்பின் உறுப்புரை 105 இன்கீழ் நீதிமன்றத்தினை அவமதித்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டாரேயொழிய, மத விடயங்களுடன் தொடர்புடைய குற்றமொன்றிற்காகத் தண்டிக்கப்படவில்லை.[13]

அவரின் குற்றத்தீர்ப்பானது பின்னர் உச்சநீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டது. அதே சம்பவம் தொடர்பான குற்றவியல் அச்சுறுத்தல் மற்றும் தொந்தரவிற்காக ஞானசார தேரர் அதற்கு முன்னரும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தார்.[14] 2019 மே மாதத்தில, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஜனாதிபதி மன்னிப்பளிக்கப்பட்டதன் பின்னர் ஞானசார தேரர் விடுவிக்கப்பட்டார். இம்மன்னிப்புச் செயலானது தற்போது உச்ச நீதிமன்றத்தின் முன்னிலையில் அடிப்படை உரிமைகள் விண்ணப்பமொன்றிற்கு உட்பட்டுள்ளது.[15]

---

[12] உதாரணத்திற்காக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு எதிர் ஜே.எஸ். திஸ்ஸநாயகம் [2008] HC 4425/2008 வழக்கினைப் பார்க்கவும். இவ்வழக்கில், இயங்கலை சஞ்சிகையொன்றில் தீங்கற்றதொரு அறிக்கையினை வெளியிட்டமைக்காக ஊடகவியலாளரொருவருக்கு தண்டனை அளிப்பதற்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் கீழே கலந்துரையாடப்பட்டுள்ள சக்திக சத்குமார வழக்கினையும் பார்க்க.

[13] கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பாக (மேன்முறையீட்டு நிகழ்வு குறப்பு 8 ஆகஸ்ட் 2018). இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 105(3) ஆனது பின்வருமாறு கூறுகின்றது: 'இலங்கைக் குடியரசின் உயர்நீதிமன்றம், இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியன ஒவ்வொன்றும் மேனிலைப் பதிவேட்டு நீதிமன்றமாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நீதிமன்றத்திற்குரிய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும், மேற்படி தத்துவம், தம்மை அவமதித்தமைக்காக, அத்தகைய அவமதிப்பு நீதிமன்றத்திலேயே புரியப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது வேறெங்கும் புரியப்பட்டிருப்பினுஞ்சரி, நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு மறியற்றண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது இவை இரண்டினாலும் தண்டிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும். மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தத்துவம், இவ்வுறுப்புரையின் (1)(இ) எனும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு ஏதேனும் நீதிமன்றத்தை, நியாயசபை அல்லது நிறுவனத்தை அவமதித்தமைக்காக, அத்தகைய அவமதிப்பு அத்தகைய நீதிமன்றத்தின், நியாய சபையின் அல்லது நிறுவனத்தின் முன்னிலையில் புரியப்பட்டிருப்பினுஞ்சரி, வேறெங்கும் புரியப்பட்டிருப்பினுஞ்சரி, தண்டிப்பதற்கான தத்துவத்தினையும் உள்ளடக்கும்.'

[14] 'Sri Lankan Buddhist Monk Sentenced Six Years' Jail In Contempt Case' (*NDTV*, 8 August 2018) https://www.ndtv.com/world-news/sri-lankan-buddhist-monk-sentenced-six-years-jail-in-contempt-case-1897204.

[15] இதனையும் பார்க்க: Mario Gomez, *Prosecuting Religious Violence in Sri Lanka*. In Thio Li-ann and Jaclyn L Neo (eds), *Religious Offences in Common Law Asia: Colonial Legacies, Constitutional Rights and Contemporary Practice*, (Hart: 2020;) pp 245 - 280.

2019 இல், திகன மற்றும் அண்மித்த பகுதிகளில் மார்ச் 2018 இல் இடம்பெற்ற வன்முறைக்கு பங்களித்ததில் முகப்புத்தகத்தின் வகிபாகம் தொடர்பான, யுசவளைடந ழுநெ இன் சுயாதீன மனித உரிமைகள் தாக்க மதிப்பீடானது கீழ்வரும் அவதானிப்பினை மேற்கொண்டுள்ளது:

> யுசவளைடந ழுநெ இன் மதிப்பீடானது, முகப்புத்தகத் தளமானது வதந்திகள் மற்றும் வெறுப்புப் பேச்சு பரப்பப்படுவதற்கு பங்களித்துள்ளதாகவும், இவை 'முடக்கலை' வன்முறைகளுக்கு வழிவகுத்திருக்கலாம் என்பதனையும் காட்டுகின்றது. உண்மையில், வெறுப்புப் பேச்சு (உதாரணமாக, அனைத்து முஸ்லிம்களையும் கொல்லுங்கள், குழந்தையொன்றினைக் கூட காப்பாற்ற வேண்டாம், அவர்கள் நாய்கள்) மற்றும் பொய்யான தகவலின் (உதாரணமாக, முஸ்லிம் உணவக உரிமையாளர் ஒருவர் அவரின் வாடிக்கையாளர்களின் உணவில் கருத்தடை மாத்திரைகளை சேர்த்துள்ளார்) பெருக்கமானது அமைதியின்மைக்கு வழிவகுத்திருக்கலாம் என்பதுடன், அவ் உணவக உரிமையாளர் விடயத்தில் உடல்ரீதியான தீங்கிற்கும் வழிவகுத்திருக்கலாம் என இம்மதிப்பீடு கண்டறிந்துள்ளது…முகப்புத்தகம் அதன் வியாபாரத்தினால் ஏற்படுகின்ற எதிர்மறையான மனித உரிமைத் தாக்கங்களை குறைப்பதற்கு தகுந்த முயற்சி எடுத்தல் வேண்டும். எவ்வாறெனினும், முகப்புத்தகத்தின் பதிலிறுப்பு மந்தமானது மற்றும் சில சமயங்களில் போதுமற்றதென யுசவளைடந ழுநெ கண்டறிந்துள்ளது. உண்மையில், இவ் மனித உரிமைகள் தாக்க மதிப்பீட்டிற்கு முன்னர், இலங்கையில், முகப்புத்தகத்திடம் மனித உரிமைகள் தொடர்பான முறையான தகுந்த முயற்சியிராமை மற்றும் 2018 மே இல் இடம்பெற்ற கண்டி சம்பவத்தின்போது முகப்புத்தக பணியாளர்களிடையே காணப்பட்ட கலாசார மற்றும் மொழி நிபுணத்துவம் மட்டுப்படுத்தப்பட்டமையாக இருந்தமை என்பன இயங்கலை ஈடுபாட்டிலிருந்து முடக்கலை தீங்கு தோற்றுவிக்கப்படுவதற்கு பங்களித்திருக்கலாம். உள்ளடக்கத்தின் உண்மைத்தன்மை அல்லது எண்ணத்தினைப் பொருட்படுத்தாது, தளத்தில் ஈடுபாட்டினை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டிருந்த வழிமுறைகள், (தற்போது மீளப்பெறப்பட்டுள்ளன) இதனை சாத்தியமானளவு மேலும் மோசமானதாக்கியிருக்கும்…2018 இணையத் தகர்விற்கு முன்னர், சமுதாய நியமங்களை மீறுகின்ற உள்ளடக்கங்களை சரியான நேரத்தில் நீக்கத் தவறியமையினூடாக, முகப்புத்தகமானது இலங்கையில் அதன் சமுதாய நியமங்களை வினைத்திறனாக அமுல்படுத்துவதற்கு தவறியுள்ளது. இது

முகப்புத்தகத்தில் வெறுப்புப் பேச்சு மற்றும் ஏனைய வடிவங்களிலான தொந்தரவு எஞ்சியிருப்பதற்கும் மற்றும் பரப்பப்படுவதற்கு கூட வழிவகுத்தது.[16]

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்திற்கான விசேட அறிக்கையிடுனர் இலங்கை தொடர்பான தனது அண்மைய அறிக்கையில் கீழ்வரும் அவதானிப்பினை மேற்கொண்டுள்ளார்:

*67. வெறுப்புப் பேச்சினை செய்கின்ற குற்றவாளிகள் அவர்களுடைய பிரச்சாரத்தினைத் தொடர்வதற்கு முடியும் மற்றும் எவ்வித சட்ட எதிர்விளைவுகளுமின்றி தீங்கினை ஏற்படுத்த முடியுமென்ற பொதுவான புலனுணர்வு பாதிக்கப்பட்டவர்களிடையே காணப்படுகின்றது. நீதியினைப் பெற்றுக் கொள்வதற்கான எவ்வித வகையுமில்லாதுள்ள அதேவேளை, வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்புக் குற்றங்களின் தொடர்ச்சியான அச்சுறுத்தலினால் சிறுபான்மை சமுதாயங்கள் பாதிக்கப்படக்கூடியத் தன்மையினை தீவிரமாக அனுபவித்து வருகின்றன. 2014 இல் அளுத்கமயில், 2017 இல் ஜிந்தோட்டையில், அதேபோல 2018 இல் திகனவில் இடம்பெற்ற வன்முறைகளினால் ஏற்பட்ட பல்வேறு உளவூறுகளுக்குப் பின்னர் அவர்களுள் பெரும்பாலானோர் அரசு மற்றும் சட்ட அமுலாக்க நிறுவனங்களின்மீதான நம்பிக்கையினை இழந்துவிட்டனர். இவ்வன்முறைச் சம்பவங்கள் ஆதனச் சேதம், தீவிர காயம் மற்றும் அளுத்கம மற்றும் திகன சம்பவங்களில் மரணம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இவை வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்பு வன்முறை, இன மற்றும் மத அடையாளங்களை அரசியல்மயப்படுத்தல், சிறுபான்மை சமுதாயங்களை, குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்தை இலக்கு வைத்தல் என்பனவற்றுக்கான தெளிவான சமகால உதாரணங்களாகும். ஒவ்வொரு சம்பவம் தொடர்பிலும் போதுமான சான்றுகள் காணப்படுகின்ற போதிலும்கூட, அச்சம்பவம் நடந்து பல வருடங்களுக்கு பின்னர், அரசாங்கம் சில நபர்களை கைது செய்திருந்தபோதிலும் மற்றும் சில பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டிருந்தபோதிலும், இன்னும் ஒரு குற்றவாளியேனும் பொறுப்புக்கூறலுக்குட்படுத்தப்படவில்லை. அத்தகைய வன்முறை பிரத்தியேகமாக முஸ்லிம்களை மாத்திரம் இலக்கு வைக்கவில்லை, அதனை ஒத்த வன்முறை தமிழர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் பல்வேறு*

[16] Article 1, 'Assessing the Human Rights Impact of the Facebook Platform in Sri Lanka', (2018) on file with the author.

சந்தர்ப்பங்களில் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதனை குறித்துகொள்வதும் பெறுமதி மிக்கதாகும்.[17]

[17] UN OHCHR, 'Report of the UN Special Rapporteur on Freedom of Religion or Belief, Dr Ahmed Shaheed, to the Human Rights Council, following a country visit to Sri Lanka in August 2019' (28 February 2020) UN Doc A/HRC/43/48/Add.2, at para 67, www.ohchr.org/EN/Issues/FreedomReligion/Pages/Visits.aspx

## மறைமையியல்

மூன்று மாத காலத்திற்கும் மேலாக (2020 மார்ச் முதல் ஜுன் வரை), இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷக ஐக்கியத்துவத்தின் ஆய்வாளர்கள், இலங்கையில் சிறுபான்மை மதங்களுக்கெதிரான வெறுப்புப் பேச்சுக்கான சான்றுகளைத் திரட்டுவதற்காக பல இயங்கலைத் தளங்களை ஆய்வு செய்திருந்தார்கள். கொவிட்-19 நோய்ப்பரவுகைக்கான பதிலிறுப்பொன்றாக இலங்கையானது 2020 மார்ச் 24 முதல் மே 10 வரையில் தொடர்ச்சியாக ஊரடங்கிற்கு உட்பட்டிருந்தது. இம்மூன்று மாத காலப்பகுதியில் செய்யப்பட்ட 103 பதிவுகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக இப்பகுப்பாய்வு கவனம் செலுத்துவதுடன் குறிப்பிட்ட சில போக்குகளையும் பாங்குகளையும் அடையாளப்படுத்துகின்றது. இக்காலப்பகுதியில் வெறுப்புப் பேச்சுக்கான உள்ளடக்கம் பிரயோகப்படுத்தப்பட்ட விதம் மற்றும் இயங்கலைத் தளங்கள் ஏனைய மதங்களை அச்சுறுத்தலொன்றாகக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட விதம் என்பனவற்றில் இந்நோய்ப்பரவுகை தாக்கம் செலுத்தியிருந்த அதேவேளை, உள்ளடக்கங்கள் முன்னர் பயன்படுத்தப்பட்ட பதிவுகள் மற்றும் கருத்துக்களின் வகைகளின் தொடர்ச்சியினைக் குறிப்பிட்டு காட்டின. பதிவுகள் மற்றும் கருத்துக்களைக் கண்காணிப்பதற்கு கீழ்வரும் செயன்முறை பின்பற்றப்பட்டது:

முதல் படியாக, கீழ்வருவனவற்றோடு சேர்த்து பக்கங்கள் மற்றும் குழு தளங்கள் என்பன அடையாளம் காணப்பட்டன:

- கிசு கிசு தளங்கள்
- செய்தி ஊடகம்
- இயங்கலை ஊடகவியலாளர் பிரஜைகள்
- புகழ்பெற்ற தனிநபர்களின் இயங்கலைப் பக்கங்கள்

இதனைத் தொடர்ந்து, கண்காணிக்கத் தீர்மானிக்கப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சொற்கள் மற்றும் ஹேஷ்டேக் (Hashtag) இல் பிரபல்யமாக உள்ளவை என்பன கண்டறியப்பட்டன. அத்துடன் பிரதான சொற்களைக் கொண்டு சொற் களஞ்சியமொன்றும் உருவாக்கப்பட்டது. அதன்பின்னர், மூன்று மாத காலப்பகுதியில் தேடுகைகளை செய்வதற்காக இது பயன்படுத்தப்பட்டது. தேடுகையினூடாக, உள்ளடக்கங்கள், பதிவுகள் மற்றும் கருத்துக்களின் திரைப்பிடிப்புக்கள் (Screenshots) கண்டறியப்பட்டன என்பதுடன் கீழ்வரும் தரவுகளை உள்ளடக்கிய கூகுள் (Google) தாள்கள் ஆக்கப்பட்டன:

- திரைப்பிடிப்பு இலக்கம்
- திகதி
- எழுதியவர்
- தனிநபர் அல்லது குழு
- உள்ளடக்கத்தின் வகை (பதிவு/படப்பகடி (meme) /காணொளி /GIF)
- பதிவின் சுருக்க விபரணம்
- வரவேற்பு (விருப்பங்கள்(likes)/கருத்துக்கள்/பார்வையிடல்களின் (views) எண்ணிக்கை
- இலக்கு வைக்கப்பட்ட குழு / சிறுபான்மை
- தொடர்புற்றுள்ள ஏதேனும் விசேட பிரச்சினை (குறிப்பான சம்பவம்)
- வேறு கருத்துக்கள்

சிங்களம் மற்றும் தமிழில் இரண்டு தரவு அமைவுகள் உருவாக்கப்பட்டன என்பதுடன் அவை ஆங்கிலத்திற்கு மாற்றப்பட்டதுடன், அதனை அடிப்படையாகக் கொண்டு பிற்பட்ட பகுப்பாய்வு உருவாக்கப்பட்டது.

## வெறுப்பப் பெச்ச என்றால் என்ன?

வெறுப்புப் பேச்சுக்கான உலகளாவிய வரைவிலக்கணமொன்று இல்லை என்பதுடன் வெறுப்பு பேச்சினை வரையறுப்பது சர்வதேச மற்றும் உள்நாட்டு மட்டத்தில் சவாலினை உருவாக்கியுள்ளது. சில நாடுகளில், சட்டங்கள் மற்றும் கொள்கைகள் என்பன ஊடகவியலாளர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் மத மற்றும் இன சிறுபான்மையினரை தொந்தரவு செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிலநேரங்களில் சட்டங்களும் கொள்கைகளும் தகவலுக்கான அணுகுதல் மற்றும் இணையத்திற்கான அணுகுதலை மட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. சட்டங்கள் மற்றும் கொள்கைகள் இவ்வழியில் பயன்படுத்தப்படுகின்றபோது, அவை சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடுவதற்கான மற்றும் அதிருப்தியினைத் தெரிவிப்பதற்கான உரிமையில் சில்லிடும் விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன. ஆகவே, வெறுப்புப் பேச்சு தொடர்பான எந்தவொரு ஒழுங்குவிதியும், சுதந்திரமான பேச்சு மற்றும் வெறுப்பு, வன்முறை

மற்றும் பாரபட்சத்திற்கான தூண்டல் என்பவற்றுக்கிடையில் பொருத்தமான சமநிலையினைப் பேணுதல் வேண்டும், அத்தகைய சமநிலையை நடைமுறையில் பேணுதல் சில நேரங்களில் கடினமானதாக அமையலாம். பேச்சு இடையூறு செய்வதாய், அசௌகர்யமானதாய் மற்றும் விமர்சிப்பதாய் இருக்கலாம், எனினும் அத்தகைய பேச்சு வன்முறை, பகைமை அல்லது பாரபட்சத்தினைத் தூண்டாதவரையில் மட்டுப்படுத்தப்படக்கூடாது. கருத்துக்களைக் கொண்டிருப்பதற்கான மற்றும் தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை நாடுவதற்கான, பெற்றுக்கொள்வதற்கான மற்றும் பகிர்வதற்கான உரிமை என்பன சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான உரிமையின் மையப்பகுதிகளாக விளங்குகின்றன. வெறுப்புப் பேச்சுக்கான மிகப்பரந்தளவான வரைவிலக்கணம், இவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சில சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துள்ளதனைப்போன்று, நெறிமுறையான பேச்சினை தடை செய்வதற்கான சுதந்திரத்தினை அரசிற்கு வழங்கும்.[18] சுதந்திரமான பேச்சினை பாதுகாக்கின்ற அதேவேளை, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயமானது:

(1) போருக்கான எந்தவொரு பரப்புரையும் சட்டத்தினால் தடை செய்யப்படுதல் வேண்டும்

(2) பாரபட்சத்தை, எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வன்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன அல்லது மதரீதியான பகைமைக்கான எந்தவொரு ஆதரித்து வாதாடுதலும் சட்டத்தினால் தடை செய்யப்படுதல் வேண்டும்.[19]

ரபாட் செயற்பாட்டுத் திட்டமானது, வெறுப்புப் பேச்சுக்களாக குற்றமொன்றாக்கப்பட வேண்டிய வெளிப்படுத்தல்களைத் தீர்மானிப்பதற்கான கீழ்வரும் ஆறு நுட்பங்களைப் பட்டியற்படுத்துகின்றது:

**சூழமைவு:** குறிப்பிட்ட கூற்றுக்கள், இலக்கு வைக்கப்படுகின்ற குழுவிற்கு எதிராக பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறையினைத் தூண்டக்கூடியனவா என்பதனை மதிப்பிடுவதில் சூழமைவு உயரிய முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது என்பதுடன் அது செயலெண்ணம் மற்றும்∴அல்லது காரணகாரியத் தொடர்பு ஆகிய இரண்டிலும் நேரடித் தொடர்பினைக் கொண்டிருக்கும். சூழமைவின் பகுப்பாய்வானது, பேச்சுடன்

[18] குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 19 இனைப் பாரக்க. அத்துடன் மனித உரிமைகள் குழுவின் பொதுக் கருத்து இலக்கம் 34 இனையும் பார்க்க.

[19] குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 20. அனைத்து வடிவங்களிலான இன பாரபட்சத்தினை இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தின் உறுப்புரை 4 இனையும் பார்க்க.

தொடர்புடைய அச்செயலை, அப்பேச்சு செய்யப்பட்ட மற்றும் பகிரப்பட்ட நேரத்திலான சமூக மற்றும் அரசியல் சூழமைவிற்குள் வைத்துப் பார்க்க வேண்டும்.

***பேசுபவர்:*** *சமூகத்தில் பேசுபவரின் நிலைப்பாடு அல்லது அந்தஸ்த்து என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும், விசேடமாக, அப்பேச்சு எக் கேட்போர் கூட்டத்தினை நோக்கி செய்யப்பட்டுள்ளதோ, அக்கூட்டத்தினரின் சூழமைவில் தனிநபர்களின் அல்லது குழுக்களின் நிலைப்பாடு*

***செயலெண்ணம்:*** *குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 20 செயலெண்ணத்தினை எதிர்நோக்கியுள்ளது. சமவாயத்தின் உறுப்புரை 20 இன்கீழ் ஒரு செயல் குற்றமொன்றாக்கப்படுவதற்கு அச்செயலின் கவனக்குறைவு மற்றும் பொறுப்பற்றத்தன்மை என்பன போதுமானதல்ல, ஏனெனில், இவ் உறுப்புரையானது, வெறுமனே ஆவணங்களைப் பகிர்தல் மற்றும் சுற்றியனுப்பதலுக்கு மாறாக ''ஆதரித்து வாதாடுதல்'' மற்றும் ''தூண்டுதல்'' ஆகியன குறித்தே குறிப்பிடுகின்றது. அவ்வகையில், அது செய்யப்பட்டுள்ள பேச்சின் குறிக்கோள் மற்றும் விடயப்பொருள் அதேபோல கேட்போர் கூட்டம் என்பவற்றுக்கடையிலான ஒரு முக்கோண உறவின் செயற்பாட்டினைத் தேவைப்படுத்துகின்றது.*

***உள்ளடக்கம் மற்றும் வடிவம்:*** *பேச்சின் உள்ளடக்கமானது நீதிமன்றங்களின் ஆழ்ந்தாராய்வுகளின் முக்கிய குவியங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது என்பதுடன் அது தூண்டுதலின் முக்கிய ஆக்கக்கூறாகவும் அமைகின்றது. உள்ளடக்கப் பகுப்பாய்வானது, குறிப்பிட்ட பேச்சு சினமூட்டுகின்ற மற்றும் நேரடியானதாயுள்ள அளவு மட்டம், அதேபோல, அப்பேச்சில் பயன்படுத்தப்பட்டுள்ள வடிவம், பாணி, வாதங்களின் தன்மை அல்லது பயன்படுத்தப்பட்டுள்ள வாதங்களுக்கிடையே பேணப்பட்டுள்ள சமநிலைத்தன்மை என்பனவற்றை உள்ளடக்கலாம்.*

***குறித்த பேச்சுடன் தொடர்புடைய செயலின் விஸ்தீரணம்:*** *விஸ்தீரணமானது, குறித்த பேச்சுடன் தொடர்புடைய செயலின் அடைவு, அதன் பகிரங்கத் தன்மை, அதன் பரிமாணம் மற்றும் அதனைக் கேட்போரின் அளவு போன்ற ஆக்கக்கூறுகளை உள்ளடக்கும். கவனிக்கத்தகு வேறு ஆக்கக்கூறுகள், குறிப்பிட்ட பேச்சு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளதா, எவ்வகையான பகிர்ந்தளிப்பு முறைகள் பயன்படுத்தப்பட்டன, உதாரணமாக தனியொரு துண்டுப் பிரசுரம் மூலமாகவா*

அல்லது ஜனரஞ்சக ஊடகம் அல்லது இணையத்தினூடாக ஒளிபரப்பப்பட்டதா, நிகழ்வெண், தொடர்பாடல்களின் அளவு மற்றும் விஸ்தீரணம், கேட்போர் கூட்டம் தூண்டுதலின்பேரில் செயற்படுவதற்கான வழிவகைகளைக் கொண்டிருந்தனரா, குறிப்பிட்ட கூற்று (அல்லது வேலை) மட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பகிரப்பட்டதா அல்லது பொது மக்கள் பரவலாக அணுகக்கூடிய வழிகளில் பகிரப்பட்டதா போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும்.

**உடனடித்தன்மை உள்ளடங்கலாக நிகழத்தக்கநிலை:** வரைவிலக்கணத்தின் அடிப்படையில் பார்க்கின்றபோது, தூண்டுதல் என்பது, இன்னமும் நிறைவாக உருப்பெறாத குற்றமொன்றாக உள்ளது. குறிப்பிட்ட பேச்சு குற்றமொன்றாவதற்கு, குறிப்பிட்ட தூண்டுதல் பேச்சினூடாக ஆதரிக்கப்பட்டுள்ள செயலொன்று புரியப்பட்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இருந்தபோதிலும், தீங்கொன்று ஏற்படுத்தப்படுவதற்கான குறிப்பிட்ட அளவான அபாய நேர்வொன்று அடையாளப்படுத்தப்பட வேண்டும். அதாவது, நேரடியான காரணக்காரியத்தொடர்பொன்று உள்ளது என்பதனை அங்கீகரித்து, குறிப்பிட்ட பேச்சானது இலக்கு வைக்கப்பட்ட குழுவிற்கு எதிரான உண்மையான செயலொன்றினைத் தூண்டத்தக்கது என்பதற்கான நியாயமான சாத்தியப்பாட்டுத்தன்மை உள்ளதாக நீதிமன்றங்கள் தீர்மானிக்க வேண்டும்.[20]

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்கு சட்டத்தின் பிரிவு 3 தொடர்பான தனது சட்டப்பகுப்பாய்வில், அவ் ஏற்பாடு எவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான தனது பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது.[21] இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டப் பகுப்பாய்வானது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் பிரிவு 20 இனைத் தழுவியதாகும். இதில், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்கு சட்டத்தின் பிரிவு 3 ஆனது ‘‘ரபாட் செயற்பாட்டுத்திட்டத்தின்’’ பகுப்பாய்வினைத் தழுவியதாகும் என அது

---

[20] UNGA, 'Annual Report of the United Nations High Commissioner for Human Rights: Addendum – Report of the United Nations High Commissioner for Human Rights on the Expert Workshops on the Prohibition of Incitement to National, Racial or Religious Hatred' (11 January 2013) UN Doc A/HRC/22/L7/Add.4, at www.ohchr.org/Documents/Issues/Opinion/SeminarRabat/Rabat_draft_outcome.pdf.

[21] Human Rights Commission of Sri Lanka, 'The Human Rights Commission of Sri Lanka's (HRCSL) Analysis of the Scope of Section 3 of the ICCPR Act No 55 of 2007 and Attendant Guidelines' *Sri Lanka Brief* (29 August 2019) at www.srilankabrief.org/2019/09/sri-lankas-hrcsl-provides-its-analysis-of-the-scope-of-section-3-of-the-iccpr-act-in-the-context-of-recent-abuses-of-the-act/.

வாதிடுகின்றது. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்பாட்டொழுங்கு சட்டத்தின் பிரிவு 3 ஆனது, குறிப்பிட்ட விடயப்பொருள்மீதான சர்வதேச சட்டவியலின் அடிப்படையிலும் மற்றும் ரபாட் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆறு-பகுதிகளைக் கொண்டுள்ள தெரிவு நிலையெல்லையின் அடிப்படையிலும் பொருட்கோடல் செய்யப்பட வேண்டுமென இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு விதந்துரைத்துள்ளது. மேலும், பிரிவு 3 இன் கீழான வெறுப்பிற்கான ஆதரிப்பானது, பாரபட்சம், விரோதம் அல்லது வன்முறைக்கான செயலெண்ணத்துடனான தூண்டுதலை உள்ளடக்காதவரையில், அது தடை செய்யப்படலாகாது என விதந்துரைத்துள்ளது. பிரிவு 3 ஆனது தனித்து நின்று செயற்படக்கூடிய ஒன்றல்ல என்பதுடன் அது அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள வெளிப்படுத்தலுக்கான சுதந்திரத்தின் உரிமையின் அடிப்படையில் பொருட்கோடல் செய்யப்பட வேண்டும்.[22]


வெறுப்புப் பேச்சு தொடர்பான கீழ்வரும் வரைவிலக்கணம் இயங்கலை உள்ளடக்கத்திற்கான தேடுகையில் இக்கற்கையினை வழிநடத்தியுள்ளது:

> *வகுப்பு, இனம், மதத் தொடர்பு, பாலியல் நோக்குநிலை, சாதி, பால், பால்நிலை, பால்நிலை அடையாளம் அல்லது இயலாமையின் அடிப்படையில் நபரொருவர் மீதோ அல்லது குழுவொன்றின் மீதோ செய்யப்படுகின்ற நேரடித் தாக்குதல். இது வன்முறையான அல்லது மனிதநேயமற்ற அல்லது இழிவான பேச்சு, தாழ்மைப்படுத்துகின்ற கூற்றுக்கள், புறக்கணிப்பு அல்லது பிரித்து வைத்தலுக்கான அழைப்புக்கள், குறிப்பிட்ட குழு அல்லது தனிநபர் மீதான வன்முறைக்கான அழைப்புக்கள் மற்றும் வன்முறைக்கான ஆதரிப்புக்கள் மற்றும் தூண்டல்கள் என்பனவற்றை உள்ளடக்கும்.*

[22] இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(அ) இல் சுதந்திரமான வெளிப்படுத்தலுக்கான உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. See also Centre for Policy Alternatives, '*Confronting Accountability for Hate Speech in Sri Lanka: A Critique of the Legal Framework*' (2018).


## கண்டறியப்பட்டவைகள்

*மார்ச் முதல் ஜுன் வரையான மூன்று மாதக் காலப்பகுதியில், 103 பதிவுகள், கீச்சுக்கள் (வறநநவள) மற்றும் கருத்துக்கள் கண்காணிக்கப்பட்டன. அவற்றுள் 53 சிங்கள மொழியிலும், 50 தமிழ்மொழியிலும் காணப்பட்டன. பெரும்பாலான பதிவுகள், கீச்சுக்கள் மற்றும் கருத்துக்கள் முஸ்லிம்களை இலக்கு வைப்பனவாகக் காணப்பட்ட அதேவேளை, கிறிஸ்தவர்களை இலக்குவைத்தவற்றின் எண்ணிக்கையும் அதிகளவாகக் காணப்பட்டது. முஸ்லிம்களுக்கெதிரான வெறுப்புப் பேச்சு 2009 ஆம் ஆண்டு யுத்தத்திற்கு பின்னர் அதிகரித்ததுடன் அது 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுக்கு பின்னர் மேலும் தீவிரமடைந்தது. மதிப்பீடு செய்யப்பட்ட 103 பதிவுகளுள், 60 (58%) முஸ்லிம்களை அல்லது இஸ்லாத்தினை வேறுபட்ட காரணிகளின் அடிப்படையில் தாக்கியிருந்தன. 31 பதிவுகள் (30%) கிறிஸ்தவர்களையும் ஐந்து பதிவுகள் தமிழர்கள் அல்லது இந்து மதத்தினையும் தாக்கியிருந்தது. அரிதாக பௌத்தம் மற்றும் சிங்களவர்களைத் தாக்குகின்ற பதிவொன்று காணப்பட்டது.*



**சிங்கள மொழியிலான பதிவகள்**

மதிப்பிடப்பட்ட சிங்கள மொழிப் பதிவுகளில், அதிக எண்ணிக்கையான பதிவுகள் முஸ்லிம்களைத் தாக்கியிருந்தன. மதிப்பிடப்பட்ட 53 சிங்கள மொழிப் பதிவுகளில், 42 (அல்லது 79.2 சதவீதமானவை) முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்திற்கு எதிரான வசைகளாகக் காணப்பட்டன. மறு புறத்தில், தமிழில் காணப்பட்ட இயங்கலைத் தாக்குதல்கள் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கிடையில் ஏறக்குறைய சமமாகப் பிரிக்கப்பட்டிருந்தன. மதிப்பிடப்பட்ட 50 தமிழ் மொழிப் பதிவுகள் மற்றும் கீச்சுக்களில் 23 பதிவுகள் (46%) தமிழ் இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களையும் 18 பதிவுகள் (35%) முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்தையும் தாக்கியிருந்தன.





சிங்கள மொழியில் காணப்பட்ட முஸ்லிம்களைத் தாக்குகின்ற பதிவுகள் பொதுத்தன்மையினதாயும் மற்றும் கொவிட்-19 நோய்ப்பரவுகையுடன் தொடர்புற்றத் தன்மையினதாயும் கலவையாகக் கணப்பட்டன. பொதுத்தன்மையினை உடையப் பதிவுகள், கடந்த பல ஆண்டுகளாக சமூக ஊடகங்களில் வெறுப்புப் பேச்சின் பகுதிகளாகக் காணப்பட்ட, முஸ்லிம்களுக்கு எதிரான மாறுதலற்ற நிலைப்பாடுகள், மாயைகள் மற்றும் பொய்யான தகவல்களின் தொடர்ச்சியாக அமைந்திருந்தன. எவ்வாறெனினும், பொதுத் தன்மையினையுடைய கருத்துக்கள் கொவிட்-19 தொடர்பானப் பதிவுகளைவிட அதிகமாக தளமெங்கிலும் பகிரப்பட்டன. மியன்மாரில் முஸ்லிம்கள் பௌத்த மதகுரு ஒருவரின்

பொம்மை உடலினை எரிக்கின்ற வரைபடவிளக்கமானது 'முஸ்லிம்கள் சனத்தொகையின் பாதியாக மாறும்போது இது இலங்கையிலும் இடம்பெறும்' என்ற எச்சரிக்கையுடன் நபரொருவரினால் பதிவிடப்பட்டிருந்தது. இப்பதிவு கிட்டத்தட்ட 1000 பகிர்வுகளைப் பெற்றிருந்தது. தனிநபரொருவரால் பதிவு செய்யப்பட்ட, நாட்டிற்கு ரோஹிங்கியா முஸ்லிம்கள் அவசியமில்லை என கூறி அவர்களைக் கொல்வதற்காக அழைப்பு விடுத்திருந்த, மற்றுமொரு பதிவு அத்தளத்தில் கிட்டத்தட்ட 9,000 தடவைகள் பகிரப்பட்டிருந்தது. அதனையொத்த, முஸ்லிம்கள் அடிக்கப்பட வேண்டும் மற்றும் தாக்கப்பட வேண்டும் என்ற குழு அழைப்பு தொடர்பான பதிவு 2,400 தடவைகள் விரும்பப்பட்டிருந்ததுடன் 950 தடவைகள் பகிரப்பட்டிருந்தது. இஸ்லாத்தினை அவதூறு செய்து, முஸ்லிம்களை எரிப்பதற்கு அழைப்பு விடுத்திருந்த குழு பதிவொன்று 1,200 தடவைகள் பகிரப்பட்டிருந்தது.




இரண்டு முஸ்லிம்களின் கேலிச்சித்திரங்கள்- ஒன்று 2019 ஏப்ரலில் வெடிகுண்டுகளை ஏந்திக்கொண்டும், மற்றையது 2020 இல் வைரசினை ஏந்திக்கொண்டும் இருப்பது போன்ற கேலிச்சித்திரங்கள்- நோய்ப்பரவுகையுடன் தொடர்புடைய பதிவுகளுக்கான குறிப்பான உதாரணமாகும். மேலும், மார்ச் மற்றும் ஏப்ரலில் பதிவிடப்பட்ட பல பதிவுகள் நோய்ப்பரவுகையினை வளர்ப்போராக முஸ்லிம்களைச் சித்தரித்திருந்தன என்பதுடன் முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிரான இழிவான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியிருந்தன. 1000 தடவைகளுக்கும் மேலாகப் பகிரப்பட்டிருந்த மற்றும் 200 இற்கும் மேற்பட்ட கருத்துக்களைப் பெற்றுக்கொண்டிருந்த ஒரு பதிவில், நாட்டில் ஏன் சிங்கள நீதியமைச்சர் இல்லை என்ற கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

சுவிஸ் போதகரைத் தாக்கியிருந்த ஒரு பதிவு சிங்கள மொழியில் காணப்பட்டது, இது பற்றி கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களின் குறிப்பிட்ட சில சம்பிரதாயங்கள் மற்றும் நம்பிக்கைகளைப் பரிகசிக்கின்ற, பொதுத் தன்மையினையுடைய வேறு சில பதிவுகளும் காணப்பட்டன, ஆனால் அவை நோய்ப்பரவுகை தொடர்பான எவ்வித குறிப்பீடுகளையும் கொண்டிருக்கவில்லை. கிறிஸ்தவத்தை 'வெளிநாட்டு மதமெனவும்' மற்றும் கிறிஸ்தவர்களை 'சிங்கள-பௌத்த கலாசாரத்தின் கொள்ளையர்கள்' எனவும் குறிப்பிடும் ஓரிரு பதிவுகள் காணப்பட்டன. சுவாரஸ்யமானவகையில், இப்பதிவுகள் கிறிஸ்தவர்களை மதப்பிரிவுகளின் அடிப்படையில் அதாவது கத்தோலிக்கர்கள், புராடெஸ்டான்கள் மற்றும் சுவிஷேக கிறிஸ்தவர்கள் என வேறுபடுத்தியிருக்கவில்லை.




## அடக்க சடங்ககள் தொடர்பான சர்ச்சைகள்

மார்ச் இறுதியில் மற்றும் ஏப்ரல் ஆரம்பத்தில், கொவிட்-19 இன் விளைவாக இறந்தவர்களின் சடலங்களை அப்புறப்படுத்துவது தொடர்பான சர்ச்சை வெடித்தது. இக்காலப்பகுதியின்போது, சுகாதார அமைச்சினால் ஒன்றுடனொன்று முரண்படுகின்ற சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டன. இலங்கையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு, 25 நவம்பர் 2020 என திகதியிடப்பட்டக் கடிதத்தினூடாக, "கொவிட்-19 இனால் இறந்தவர்கள் அல்லது அதனால் இறந்தவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களின் சடலங்களை கட்டாயத் தகனம் செய்தல் அவசியமானதொன்றல்ல என்பதுடன் பொது சுகாதார பாதுகாப்பினை அடைந்து கொள்வதற்கு செய்ய வேண்டிய விகிதசமமான விடயமொன்றுமல்ல, ஆகவே அது மதம் அல்லது நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தின் மீதான அனுமதிக்கத்தக்க மட்டுப்பாடொன்றாகாது"

என்பதனை முன்னிலைப்படுத்தியிருந்தது.[23] ஒரு சுற்றுநிரூபம், மரணம் நிகழ்கின்றபட்சத்தில் அடக்கம் செய்தல் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்றும் பின்னர் வெளியிடப்பட்ட மற்றுமொரு சுற்றுநிரூபம் மரணம் நிகழ்கின்றபட்சத்தில் அனைத்து சடலங்களும் தகனம் செய்யப்பட வேண்டுமென்றும் அடக்கம் செய்யப்படக்கூடாதென்றும் கூறியது. [24] முஸ்லிம்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வார்கள் என்பதுடன் தகனம் என்பது இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் முக்கிய நடைமுறையின் பகுதியொன்றல்ல. மத சம்பிரதாயத்தினைப் பொருட்படுத்தாது அனைத்து சடலங்களும் எரிக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்த பதிவொன்று 31,000 தடவைகளுக்கும் மேலாக பகிரப்பட்டுள்ளது. ஏனைய பதிவுகளும் இந்நடைமுறையினைத் தாக்கியிருந்ததுடன், மத சம்பிரதாயங்களைப் பொருட்படுத்தாது வைரசினால் மரணிக்கின்ற அனைவரது சடலங்களையும் தகனம் செய்ய வேண்டுமென வேண்டுகோள் விடுத்திருந்தன.


## தமிழ் மொழியிலான பதிவகள்

சிங்கள மொழியில் காணப்பட்ட பதிவுகள் மற்றும் கருத்துக்கள் அதிகமாக முஸ்லிம்களைத் தாக்கியிருந்த அதேவேளை, தமிழில் காணப்பட்டப் பதிவுகள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களைத் தாக்குவதில் அதிகளவில் சமமாகவே பிரிக்கப்பட்டிருந்தன. தமிழில் காணப்பட்ட 50 பதிவுகளில் 23 பதிவுகள் (46%) தமிழினத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களை தாக்கியிருந்ததுடன், 18 பதிவுகள் (36%) முஸ்லிம்கள் அல்லது இஸ்லாத்தினைத் தாக்கியிருந்தன. நான்கு பதிவுகள் இந்து மதத்தைத் தாக்கியும், ஒரு பதிவு பௌத்தர்களையும் மற்றும் ஒரு பதிவு இனங்களுக்கிடையிலான யுத்தத்தின்போது பல கொலைகளைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட இராணுவ அதிகாரி விடுவிக்கப்பட்டமையினைத் தாக்கியும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

---

[23] Human Rights Commission of Sri Lanka, 'HRCSL observations and recommendations on Extraordinary Gazette No.2170/8 dated 11th April 2020' (25 November 2020) at https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/Observations-Recommendations-Disposal-Dead-Bodies-Covid19_compressed.pdf


[24] பார்க்க: National Christian Evangelical Alliance of Sri Lanka, '*Sri Lanka's Public Health Response: Law, Executive Action and Minority Rights*', (Sep 2020) p 15 – 16.




தமிழர்களைத் தாக்குகின்ற தமிழ் மொழிப் பதிவுகள் மூன்று வகைப்பாட்டிற்குள் உள்ளடக்கப்படுகின்றன. இந்து மத நடைமுறையினை அச்சுறுத்தல் மிக்கதாகக் காட்டுகின்ற பதிவுகள் இந்துக்களாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறியோரை பரிகசிக்கின்ற பதிவுகள் உள்ளடங்கலாக கிறிஸ்தவர்களை அவமதிக்கின்ற பொதுத் தன்மையினதான பதிவுகள் மற்றும் சுவிஸ் போதகர் மற்றும் அவருடைய மதபிரிவின் பின்பற்றுனர்களைத் தாக்குகின்ற பதிவுகள். அதிக பெரும்பான்மையான பதிவுகள் மற்றும் கருத்துக்கள் அடுத்த பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ள சுவிஸ் போதகரின் வருகையுடன் தொடர்புற்றவை ஆகும்.

முஸ்லிம்களைத் தாக்குகின்ற பதிவுகளும் மூன்று விரிவான வகைப்பாடுகளுக்குள் உள்ளடக்கப்படலாம். ஒரு தொகுதி பதிவுகள் இஸ்லாத்தினைப் பொதுவாக அச்சுறுத்தலொன்றாகக் காட்டியிருந்தன. மற்றுமொரு தொகுதி பதிவுகள் அடக்க நடைமுறைகள் மற்றும் வைரசின் காரணமாக இறந்தவர்களின் சடலங்களை அப்புறப்படுத்தல் தொடர்பான கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது. மூன்றாவது வகைப்பாடு உயிர்த்த ஞாயிறு வெடிப்பு வன்முறை தொடர்பானவையாக இருந்தது. சிங்கள மொழியில் காணப்பட்ட பதிவினை எதிரொலிப்பது போன்றமைந்த ஒரு பதிவு பள்ளிவாசல்கள் *2019* இல் ஆயுதங்களின் களஞ்சியமாகவும், *2020* இல் வைரசின்

களஞ்சியமாகவும் காணப்படுவதாக சித்தரித்திருந்தது. முஸ்லிம்களை தீவிரவாதிகளாக அடையாளப்படுத்திய நபரொருவரின் கருத்து பரந்தளவில் பகிரப்பட்டிருந்தது.





மார்ச் இறுதியில் மற்றும் ஊரடங்கு செயற்பாட்டிலிருந்தபோது, ஜனாதிபதி, மன்னிப்பதற்கான அவரது அரசியலமைப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி, இனங்களுக்கிடையிலான யுத்தத்தின்போது பல்வேறு கொலைகளைப் புரிந்தமைக்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரி ஒருவரை விடுதலை செய்திருந்தார். குறிப்பிட்ட அதிகாரி பல்வேறு குற்றங்களுக்காக மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவராக இருந்ததுடன் அவருடைய குற்றத்தீர்ப்புக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பதிவு செய்திருந்த மேன்முறையீட்டிலும் தோற்றிருந்தார். இது 2009 இல் நிறைவுபெற்ற யுத்தத்தின்போது புரியப்பட்ட குற்றங்களுக்கான அரிதான குற்றத்தீர்ப்புக்களுள் ஒன்றாக அமைந்திருந்தது. தமிழில் காணப்பட்ட ஒரேயொரு பதிவு ஜனாதிபதியின் செயலை விமர்சித்திருந்ததுடன் சிங்களவர்கள் வைரசினை விடக் கொடியவர்கள் என குறிப்பிட்டிருந்தது.

**சுவிஸ் பொதகர் தொடர்பான சம்பவம்**

சுவிஸ் போதகர் சமூக ஊடகங்களில், குறிப்பாக தமிழில், பல்வேறு பதிவுகள் மற்றும் கருத்துக்களை கவர்ந்திருந்தார். தமிழ் இனத்தைச் சேர்ந்த சுவிஸ் போதகர் மார்ச் இல் இலங்கைக்கு வருகை தந்திருந்தார் என்பதுடன் யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக நாட்டின் வடக்குப் பகுதியில் மத சேவைகளை நடத்தியிருந்தார். அவர் சுவிட்ஸர்லாந்துக்கு சென்றபோது அவருக்கு கொவிட்-19 நோய்த்தொற்று இருந்தது அறியப்பட்டதுடன் இலங்கையில் அவருடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதுடன் நோய்த்தொற்று உள்ளதா என கண்டறிவதற்கான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவமானது, குறித்த போதகரை மற்றும் அவரது சுவிசேஷக மதபிரிவினை பின்பற்றுபவர்களைத் தாக்குகின்ற பல்வேறு பதிவுகள் மற்றும் கருத்துக்கள் தமிழ் மொழித் தளங்களில் பதிவிடப்படுவதற்கு காரணமாயமைந்ததுடன் அவை பரவலாகப்

பகிரப்பட்டிருந்தன. மதிப்பிடப்பட்ட 50 தமிழ் பதிவுகள் மற்றும் கருத்துக்களில், 17 பதிவுகள் போதகர், அவரது மதபிரிவு மற்றும் அவரின் பின்பற்றுனர்களைத் தாக்கியிருந்தது. இம்மதபிரிவிலுள்ள பெண்களை ஒழுக்கமற்றோராக சித்தரிக்கின்ற இரண்டு பதிவுகள் காணப்பட்டன. பதிவொன்றிற்கான கருத்தானது, சுவிஸ் போதகர் மற்றும் அவரின் சபையின் அங்கத்தவர்களை ஒழிக்கப்பட வேண்டிய கிருமிகளாக குறிப்பிட்டிருந்தது. எவ்வாறெனினும், சிங்கள மொழிப் பதிவுகளுள் ஒன்றில் மட்டுமே சுவிஸ் போதகர் பற்றிய குறிப்பீடு கண்டறியப்பட்டது. பல சிங்கள மொழிப் பதிவுகள் முஸ்லிம்களை நோய்க்காவிகளாக சித்தரித்ததனைப் போன்று, பல தமிழ் மொழிப் பதிவுகள் கிறிஸ்தவர்களை கொவிட்-19 காவிகளாக மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தன.



## மடிவகள்

மூன்று மாத காலமாக கண்காணிக்கப்பட்ட இவ் 103 பதிவுகளும் கருத்துக்களும் சமூக ஊடகங்களில் இடம்பெற்ற மத சிறுபான்மையினர் மீதான தாக்குதலின் முன்னைய போக்குகளைப் பிரதிபலிக்கின்றன. மத சிறுபான்மையினர், குறிப்பாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், தமிழர்கள் மற்றும் இந்துக்கள் தொடர்ச்சியாக சமூக ஊடக வலைத்தளங்களில் ஆபத்தானவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர். இம்மூன்று மாத காலப்பகுதியின் போது பதிவிடப்பட்ட பல பதிவுகள் மற்றும் கருத்துக்கள், சமூக ஊடகங்களில் முன்னர் வெளியிடப்பட்ட பொய்யான தகவல்கள், மாறுதலற்ற நிலைப்பாடுகள் மற்றும் அச்சுறுத்துகின்றவொன்றாக சித்தரித்தல் என்பவற்றை பிரதிபலித்தன. நோய்ப்பரவுகையுடன் தொடர்புடைய குறிப்பான சம்பவங்கள் தொடர்பான புதிய பதிவுகளும் காணப்பட்டன.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டிகள் கொவிட்-19 வைரசினால் மரணித்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கின்றபோதிலும், முஸ்லிம்களின் அடக்க நடைமுறைகள் கண்டனத்திற்குள்ளாக்கப்பட்டன. வடக்குக்கு வருகை தந்து, பின்னர் வைரஸ் தொற்றுள்ளதாகக் கண்டறியப்பட்ட தமிழினத்தைச் சேர்ந்த சுவிஸ் போதகர் தொடர்பிலும் பல வெறுக்கத்தக்கப் பதிவுகள் மற்றும் கருத்துக்கள் தோற்றம் பெற்றிருந்தன. முஸ்லிம்கள் 2019 இல் தீவிரவாதத்தை வளர்ப்போராகவும் 2020 இல் வைரசினைக் கடத்துவோராகவும் சித்தரிக்கப்பட்டதிலிருந்து, 2019 உயிர்த்த ஞாயிறு வெடிப்பு சம்பவங்களிலிருந்து உருவான வெறுப்புப் பேச்சு இன்னமும் தொடர்கின்றது என்பது நிரூபணமாகியுள்ளது.

சிங்கள பதிவுகளில் முஸ்லிம்கள் மீதான பக்கச்சார்புத் தன்மை ஆதாரபூர்வமாகின்ற அதேவேளை, தமிழ் மொழியில் உள்ள வெறுப்புப் பேச்சு முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகிய இரு சாராரையும் தாக்கியிருந்தன. கத்தோலிக்க கர்தினாலைத் தாக்கிய இரண்டு பதிவுகள் சிங்கள மொழியில் காணப்பட்டன. பௌத்தம் ஏனைய மதங்களுக்கான மதிப்பினைத் தேவைப்படுத்தவில்லை என கூறுகின்ற ஒரு பதிவினைத் தவிர, சிங்களவர்கள் அல்லது பௌத்தம் தொடர்பான கருத்துக்களை தெரிவிக்கும் வேறு எப்பதிவும் சிங்கள மொழியில் காணப்பட்ட 53 பதிவுகளிலும் காணப்படவில்லை. தமிழில் காணப்பட்ட 50 பதிவுகளுள், மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த சிறைக்கைதியின் விடுதலையை விமர்சித்த பதிவு உள்ளடங்கலாக, இரண்டு பதிவுகள் சிங்கள-பௌத்தர்களை கண்டனத்திற்குள்ளாக்கியிருந்தது. 2019 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு வெடிப்பு சம்பவங்களாகட்டும் அல்லது 2020 இன் நோய்ப்பரவுகையாகட்டும், எதுவாயினும், வெறுப்பு

வெறியர்கள் இயங்கலையில் வெறுப்பினைப் பரப்புவதற்காக நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இலங்கையிலுள்ள பிரச்சினைகளுள் ஒன்றாக தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரம் இருந்து வருகின்றது. தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரமானது 26-வருட சிவில் யுத்தத்தின்போது பிரச்சினையொன்றாக இருந்ததுடன், அதன்போதான மனித உரிமைகள் மீறல்கள் குறித்த மிகவும் குறைவான வழக்குத்தொடர்வுகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது யுத்தத்தின் பின்னரும் மற்றும் எளிதில் மாற்றமடையக்கூடிய இன-மத சூழலின் தோற்றத்தின் பின்னரும் பிரச்சினையொன்றாகவே தொடர்ந்திருந்தது. மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான விசேட அறிக்கையிடுனரினால் மேற்சொல்லப்பட்ட கருத்துரையில் அவதானிக்கப்பட்டதனைப் போன்று, குற்றவாளிகளின் அடையாளம் மற்றும் செயல்கள் தொடர்பான முகத்தோற்றளவிலான சான்றுகள் பகிரங்கப்பரப்பில் கிடைக்கக்கூடியதாக உள்ளபோதிலும், வெறுப்புப் பேச்சு மற்றும் மத வன்முறை ஆகிய இரண்டு தொடர்பாகவும் விசாரிக்கப்படவில்லை மற்றும் வழக்குத் தொடரப்படவில்லை. வெறுப்புப் பேச்சினைப் பொறுத்தவரையில், சட்டங்கள் முஸ்லிம்களைக் கைது செய்வதற்காக மற்றும் அடைத்து வைப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கைதுகள் மற்றும் அடைத்துவைப்புக்களைத் தொடர்ந்து பக்கச்சார்பற்ற விசாரணைகளெதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்பதுடன் எந்தவொரு வழக்குத்தொடர்வும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படவில்லை.[25]

மதம் மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையிடுனர் இலங்கை பற்றிய தனது அண்மித்த அறிக்கையில்:

> இலங்கையின் சட்டக் கட்டமைப்பு மத மற்றும் நம்பிக்கைக்கான சுதந்திரத்தைக் கொண்டிருப்பதற்கான உரிமையினை ஒவ்வொருவருக்கும் உத்தரவாதப்படுத்துகின்ற அதேவேளை, நடைமுறையில் இவ் உரிமையினை அனுபவிப்பதில் பல சவால்கள் காணப்படுகின்றன. மத சிறுபான்மையினர் அவர்களுடைய மதம் அல்லது

[25] சக்திக சத்குமாரவின் வழக்கினைப் பார்க்க. இவர் பௌத்த மதத்தினை இழிவுபடுத்துகின்ற அவருடைய கற்பனைக் கதையொன்றினை இயங்கலையில் பதிவு செய்தார் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டார். The UN Working Group on Arbitrary Detention found his detention to be arbitrary, UNHRC Working Group on Arbitrary Detention, 'Opinion No 8/2020 Concerning Delankage Sameera Shakthika Sathkumara (Sri Lanka)' (1 May 2020) UN Doc A/HRC/WGAD/2020/8, at www.ohchr.org/Documents/Issues/Detention/Opinions/Session87/A_HRC_WGAD_2020_8_Advance_Edited_Version.pdf.

நம்பிக்கையினை வெளிப்படுத்துவதில் மட்டுப்பாடுகளை எதிர் கொள்கின்றனர், அவர்களுடைய வழிபாட்டிடங்கள் அசுத்தமாக்கப்படுகின்ற அதேவேளை வழிபாட்டு அமர்வுகள் போன்ற அவர்களது மத நடவடிக்கைகள் உள்ளூர்வாசிகள் மற்றும் அதிகாரிகளினால் இடையூறு செய்யப்படுகின்றன. சிறுபான்மை மத சமுதாயங்கள் புதிய வழிபாட்டிடங்களைக் கட்டுவதில் கடினத்தன்மைகள் உள்ள அதேவேளை, எதேச்சாதிகாரமான பதிவுத் தேவைப்பாடுகள் காரணமாக சில இடங்கள் மூடப்படுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றன. றோமன் கத்தோலிக்கர்களல்லாத கிறிஸ்தவர்கள், 'நெறிமுறையற்ற மதமாற்றம்' என்ற சந்தேகத்தின் காரணமாக மற்றும் அவர்களின் மதம் மாறுகின்ற உரிமை மீதான மட்டுப்பாடுகள் காரணமாக பல்வேறு எண்ணிக்கையிலான வன்முறை சம்பவங்களுக்கு ஆளாகியுள்ளனர். தேசியவாதப் போராளிகளினால் மற்றும் மதக்குழுக்களினால் இன, மத மற்றும் ஏனைய சிறுபான்மையினருக்கு எதிராக, குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற ஆக்கிரோஷத்தன்மைமிக்க பிரச்சாரங்கள் குறிப்பாகக் கவலைக்குரியவை.[26]

2018 திகன வன்முறையில் முகப்புத்தகத்தின் வகிபாகம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட சுயாதீன விசாரணையின் விளைவொன்றாக முகப்புத்தகம் ஈடுபடுதல் மற்றும் சீர்திருத்தம் தொடர்பானச் செயன்முறையொன்றினை ஆரம்பித்துள்ளது.[27] அது இலங்கைக்கான கொள்கை முகாமையாளர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்துள்ளது, முதல் முறையாக சிவில் சமுதாயங்களுடன் ஒரு ஈடுபாட்டுச் செயன்முறையினை ஆரம்பித்துள்ளது, வன்முறையினைத் தூண்டக்கூடிய பேச்சு தொடர்பாகத் தளத்தினை எச்சரிப்பதற்காக தெரிவு செய்யப்பட்ட சிவில் சமூக பங்காளர்களுடன் பணிபுரிய ஆரம்பித்துள்ளது, சமூக ஊடக பாவனை குறித்து இளைஞர்களுக்கு பயிற்சியளித்துள்ளது, சுதேசிய மொழிகளில் உள்ள பேச்சினைக் கண்காணிப்பதற்காக சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்துள்ளது மற்றும் அதன் சமுதாய நியமங்களை மீளாய்வு செய்ய ஆரம்பித்துள்ளது. சுயாதீன மீளாய்வினால் கண்டறியப்பட்ட விடயங்களுள் ஒன்றாக, முகப்புத்தகம் தனது சொந்த சமுதாய நியமங்களை உறுதிப்படுத்துவதற்கு தவறியுள்ளது என்கின்ற விடயம் அமைகின்றது.

[26] See UN OHCHR, 'Report of the UN Special Rapporteur' para 90.

[27] Article 1, 'Assessing the Human Rights Impact of the Facebook Platform in Sri Lanka' (2018), on file with the author.

உறுப்புரை 9 ஆனது பின்வருமாறு கூறுவதனூடாக பௌத்த மதத்தினை முன்னிலைப்படுத்துகின்றது:

> *இலங்கைக் குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மைத்தானம் வழங்கப்பட வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க 10 ஆம் மற்றும் 14 (1)(உ) ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதேவேளையில் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாதல் வேண்டும்.*[28]

இவ் உறுப்புரையானது வெறுமையான அரசியலமைப்பு விழுமமொன்றாக எஞ்சியிருக்கவில்லை. வெறுப்புக் குற்றங்கள் மற்றும் வெறுப்பு பேச்சினை வளர்க்கின்ற பெரும்பான்மை சமூகங்களில் உள்ளோர் தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரமொன்றில் சிறப்புரிமையளிக்கப்பட்டுள்ளனர் மற்றும் தொடர்ந்து வளமடைய அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றவகையில், அது நாட்டில் நடைமுறையிலுள்ள சமூக யதார்த்தத்தின் ஒரு பகுதியாக உள்ளது. மறுபுறத்தில், சட்டமானது, சிறுபான்மை மதங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பெரும்பான்மை மதத்தினை விமர்சிப்பதற்காக, வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தினைக் கொண்டிருப்பதற்கான தமது உரிமையினை பிரயோகிப்பதற்கு எத்தனிக்கின்றபோது அவர்களை கைது செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் பிரயோகமாகின்றது. இச் சமனற்ற இன-மத யதார்த்தம், சிறுபான்மை மதங்களை அவதூறாகத் தாக்குவதில் பேர் பெற்ற மிதவாத பௌத்த பிக்குவினை விடுதலை செய்தமை, மற்றும் இன யுத்தத்தின்போது பல கொலைகளை செய்தமைக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட இராணுவ அதிகாரியினை விடுவித்தமை போன்ற செயல்களினால் தீவிரமடைவதுடன், பெரும்பான்மை இன-மத குழுவிற்கான தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரத்தினை மீள வலியுறுத்துகின்றது.

[28] இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 9

## விதந்தரைகள்

கீழ்வரும் விதந்துரைகள் அரச நிறுவனங்கள், சமூக ஊடகத் தளங்கள், ஜனரஞ்சக ஊடகங்கள் மற்றும் சிவில் சமூகங்களுக்கு வழங்கப்படுகின்றன:

### அரச நிறவனங்களக்க

1. சட்ட அமுலாக்க அதிகாரிகள் அரசியலமைப்பினை நிலைநிறுத்துவதனையும் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணுவதில் மற்றும் வெறுப்புக் குற்றங்களுக்கான குற்றவாளிகளைக் கைது செய்வதில் சுயாதீனமாக மற்றும் பக்கச்சார்பின்றி செயற்படுவதனையும் உறுதிப்படுத்தல்.

2. சட்ட அமுலாக்க அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் மத வன்முறை மற்றும் வெறுப்பு பேச்சில் ஈடுபடாதிருப்பதனையும் மற்றும் இந்நியமங்களை மீறுகின்ற அத்தகைய அலுவலர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுவதனையும் உறுதிப்படுத்தல்.

3. வெறுப்புக் குற்றங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சினை விசாரிப்பதில் மற்றும் அவை தொடர்பாக வழக்குத் தொடர்வதில் சட்டமா அதிபர் திணைக்களம் சுயாதீனமாக, பக்கச் சார்பின்றி மற்றும் வினைத்திறனாக செயற்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.

4. சட்டவாட்சி பிரயோகிக்கப்படுகின்றது என்பதையும் வெறுப்புக் குற்றங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்களில் ஈடுபடுபவர்கள் யாராக இருப்பினும், மதகுருவாக இருப்பினும், பாராளுமன்ற உறுப்பினராக இருப்பினும் அல்லது வேறு சிறப்புரிமையளிக்கப்பட்டுள்ள துறை சார்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது மற்றும் வழக்குத் தொடரப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்தல்.

5. நீதி மற்றும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு மத வன்முறை மற்றும் வெறுப்பு பேச்சு தொடர்பான சட்டங்கள் பற்றி பயிற்சியளிப்பதற்கு முதலீடு செய்தல்.

6. சட்ட அமுலாக்க நிறுவனங்கள், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதி அமைச்சு என்பன மதரீதியாக தூணடப்பட்ட வன்முறை மற்றும் வெறுப்புப் பேச்சுக்களுடன் தொடர்புடைய நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடர்வுகள் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.

7. சகிப்புத்தன்மையின்மை, பாரபட்சம், இன அல்லது மத மாறுதலற்ற நிலைப்பாடுகள் மற்றும் வெறுப்புப் பேச்சு என்பனவற்றை பகிரங்கமாக கண்டனம் செய்தல்.

**சமூக உடகத் தளங்களக்க**

1. தளத்தில் பதிவிடப்படுகின்ற அனைத்து பதிவுகளும் இறுக்கமான கண்காணிப்பிற்கு உட்படுவதை உறுதிப்படுத்தல்.

2. தளத்தின் சமுதாய நியமங்களின் மீறல்களைப் பின்தொடர மற்றும் கண்காணிக்க உயரிய செயற்கை புலனாய்வு இயலுமை ஒன்றினை உருவாக்குவதில் முதலீடு செய்தல்.

3. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பதிவிடப்படும் பதிவுகள் மற்றும் கருத்துக்களை கண்காணிப்பதற்கான இம்மொழிகளின் தகைமைகளை பலப்படுத்துவதில் முதலீடு செய்தல்.

4. இயங்கலை வெறுப்பினைக் கையாள்வதற்கு போதுமான வகையில் சமுதாய நியமங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு அவற்றை மீளாய்வு செய்து மீள திருத்தியமைத்தல்.

5. சமூக ஊடகத் தளங்களை பொறுப்புவாய்ந்த ரீதியில் பாவித்தல் தொடர்பாக சிவில் சமுதாயங்கள், பொதுமக்கள், விசேடமாக இளைஞர்களுடன் தொடர்ந்தும் ஈடுபடுதல்.

**ஜனரங்சக உடகங்களக்க**

1. இந்நிறுவனம் மத சிறுபான்மையினருக்கு மற்றும் ஏனைய இலகுவில் ஊறுபடத்தகு குழுக்களுக்கு எதிராக வெறுப்புப் பேச்சினை பரப்பாது மற்றும் இன அல்லது மத குழுக்கள் தொடர்பான எதிர்மறையான மாறுதலற்ற நிலைப்பாடுகளைப் பரப்புவதனைத் தவிர்ப்பதனை உறுதிப்படுத்தல்.

2. ஒளிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செய்தி மற்றும் வெளியிடப்படுகின்ற ஆக்கங்களில் இலங்கையின் இன, மத மற்றும் சமூகப் பல்வகைமை போதுமானளவில் பிரதிபலிக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தல்.

**சிவில் சமதாயங்களக்க**

1. வெறுப்புப் பேச்சு மற்றும் மதரீதியாகத் தூண்டப்பட்ட வன்முறைகளை விசாரணை செய்வதற்காக மற்றும் அவை தொடர்பாக வழக்குத் தொடர்வதற்காக, பொலிஸ், நீதி அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளடங்கலாக அரச செயற்பாட்டாளர்களுடன் ஈடுபடுவதனைத் தொடர்ச்சியாக செய்தல்.

2. மதரீதியாகத் தூண்டப்பட்ட வன்முறை தொடர்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விசாரணைகள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கான கைதுகள் என்பவற்றின் தற்போதைய நிலை தொடர்பாக அறிந்து கொள்வதற்காக தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை தொடர்ந்தும் பயன்படுத்தல்.[29]

3. இயங்கலை வெறுப்புப் பேச்சுக்களை தொடர்ந்தும் கண்காணித்தலையும் அதனூடாகக் கண்டறியப்பட்டவைகளை சாத்தியமானளவு பரவலாகப் பகிரந்தளிக்கின்றமையினையும் தொடர்ச்சியாகச் செய்தல்.

4. முகப்புத்தகம் மற்றும் ஏனைய தளங்கள் தமது சமுதாய நியமங்களை பிரயோகிக்கும் விதம் மற்றும் அந்நியமங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கண்காணித்தல் தொடர்பாக முகப்புத்தகம் மற்றும் ஏனைய தளங்களுடன் தொடர்ச்சியாக இணைந்திருத்தல்.

5. இயங்கலையில் பதிவிடப்படுகின்ற வெறுப்புப் பேச்சினை எதிர்ப்பதற்கான புத்தாக்கம் மிக்க கூற்றுரைகளை பதிவிடுவதன்பொருட்டு மற்றும் பொய்யான தகவல்களுக்கு மற்றும் நீடித்திருக்கின்ற இன, மத, பால்நிலை மற்றும் வேறு சமூக, மாறுதலற்ற நிலைப்பாடுகளுக்கு சவால்விடுக்கும்பொருட்டு உள்ளடக்கங்களை ஆக்குபவர்களுக்கு பயிற்சியளிப்பதில் முதலீடு செய்தல்.

---

[29] *பார்க்க:* National Christian Evangelical Alliance of Sri Lanka (NCEASL) initiative in this regard '*Religious Freedom Violations in Sri Lanka: Responses of Law Enforcement Authorities and the Judiciary*', 2020.

6. முகப்புத்தகம் போன்ற உலகளாவிய வலைத்தளங்களுடன் இணைந்து செயற்படுவதற்காகவும் மற்றும் சிறந்த நடைமுறைகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்வதற்காகவும், இயங்கலை வெறுப்புப் பேச்சினை குறைப்பதற்காக போராடிக் கொண்டிருக்கின்ற ஆசிய பிராந்தியத்திலுள்ள மற்றும் ஏனைய பிராந்தியங்களிலுள்ள சிவில் சமூக கூட்டமைப்புக்களுடன் பங்காளராக இணைந்து செயற்படல்.